முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1345

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.06.2023, திங்கட்கிழமை

1. பரபிரம்மமே அரங்கா வாழ்க
   பரமானந்த தேசிக குருவே வாழ்கவாழ்க
   வரம்தந்து சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் சோபகிருது விடை திங்கள்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 22 ம் நாள், 05.06.2023, திங்கட்கிழமை)
   அரங்கனுக்கு பலம் கூட உரைப்பேன்
   வாசிவென்ற தலைமைகள் அத்தனையும்
   வணங்கி உன் சேவைக்குள் இருக்க
3. இருக்கவே வடிவேலன் யான்
   இணைந்து உன்னுள் அற்புதம் நடத்திவர
   கருத்தாக அரங்கன் சொல் செயல்கள்
   கட்டளையாக உலகில் இயங்கிவர
4. வருகவே உலக மாற்றம்
   வையகம் பாதுகாப்பு பெறும்படி நடந்தேறும்
   தேறவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
   தேற்றமோடு அரங்கன் செய்கின்ற தர்மமே உயர் தர்மம்
5. மாறவே தொண்டர்கள் இன்னும் சேவையை
   மகத்துவம்பட கூட்ட வேண்டும்
   மகான் அரங்கன் சொல்கின்ற செயல்வண்ண வடிவுக்கு வந்து
   மாறுதலாக உலகமெங்கும் அரங்கன் கொள்கையை எடுத்துச்செல்ல
6. அன்பர்கள் இடையே அது விழிப்புணர்வாக மாறி
   மாறுதல் உலகம் காணும்
   மக்களெல்லாம் ஞான ஆட்சிக்கு வழி வகுக்கும் வண்ணம்
   ஆறுதல் ஆதரவும் பெருகி இனிதே அற்புதம் உலகமே காணும்

7. காணவே உயர் சேவையே கட்டளையாக

கலியுகத்தில் அரங்கன் தொண்டர்கள் ஞானமாக ஏற்று எங்கும் பரப்பவேண்டும்

ஞானிகளை வணங்கி தர்மம் இன்னும் கூட்டவேண்டும்

உயர்வுபடச் செய்யசெய்ய உலகினில் மாற்றம் சடுதி காணுமப்பா

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–